Available online at: http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
IJMASRI, Vol. 3, issue 7, pp. 484- 488, Oct. -2023
https://doi.org/10.53633/ijmasri

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)

ISSN: 2582-9130 IBI IMPACT FACTOR 1.5 DOI: 10.53633/IJMASRI

RESEARCH ARTICLE

# எண்ணாயிரம் கல்வெட்டுகள் காட்டும் சோழர் கால கல்வி நிலை- ஓர் ஆய்வு

**சுரேஷ் க**
*முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், வரலாற்று துறை, அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்*

**ஆய்வுச் சுருக்கம்**

*சோழர் காலக் கல்வெட்டுகள் தனித்தன்மை வாய்ந்தவை. கல்வெட்டின் தொடக்கத்தை வைத்தே குறிப்பிட்ட காலத்தை அல்லது குறிப்பிட்ட அரச மரபால் வெட்டப்பட்டது எனக் கூற முடியும். சோழர் காலக் கல்வெட்டுகளில் குறிப்பிடத்தக்கவை மெய்கீர்த்தி என்னும் கல்வெட்டுப் பகுதியாகும். இவை செய்திகளைக் கூறுவதில் ஓர் இலக்கிய வடிவைப் பெற்றுத் திகழ்ந்தன.மெய்கீர்த்திகள் அரசனுடைய உண்மையான புகழை எடுத்துக் கூறுவதோடு அக்கால வரலாற்றையும் தெளிவாக்குகின்றன. மேலும், அரசர் தேவியருடன் வாழ்க என வாழ்த்தியும், இயற்பெயரோடு சிறப்புப் பெயரையும், ஆட்சியாண்டையும் குறிப்பிடுகின்றன. இராசராச சோழனின் மெய்கீர்த்தி சிறந்த இலக்கிய நடையில் அமைக்கப்பட்டுள்ளது. மெய்கீர்த்தியின் தொடக்கத்தை வைத்தே அது எந்த அரசனுடையது என்பதை அறியலாம்.*

***குறிச்சொற்கள்:*** *சோழர்கள், இராஜராஜசோழன்,இராஜேந்திர சோழன்*

## முன்னுரை

மன்னன் மக்களுக்கு சொல்ல நினைத்த செய்திகள் கற்களில் செதுக்கப்பட்டன நீண்ட காலம் அது அழியாது இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அவை பண்டைய காலம் முதல் கல்லில் பொறிக்கப்பட்ட காரணத்தினால் கல்வெட்டுக்கள் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் கிடைக்கின்ற கல்வெட்டுகளில் பெருமளவு தென்னிந்தியாவில் தான் கிடைக்கின்றன அதில் தமிழ் கல்வெட்டுகள் தான் அதிக எண்ணிக்கையில் கிடைக்கிறது. வரலாற்றில் பிற மூலங்களை விட கல்வெட்டு ஆதாரங்கள் நம்பத் தகுந்தவை என்று வரலாற்றாளர்களால் கல்வெட்டு ஆதாரங்களுக்கு தனி மதிப்பு உண்டு. தமிழ் சமூகத்தில் இருக்கும் பல பழக்கவழக்கங்களின் பின்புலங்களை நாம் கல்வெட்டு ஆதாரங்களை கொண்டு வரலாற்று பூர்வமாக அதை வெளி கொணர முடியும்.

தமிழர்களின் பெருமைமிக்க சான்றாக இருப்பவை கல்வெட்டுகள் கோயில்கள் மலைகள் எங்கெல்லாம் தமிழ் மன்னர்கள் காலடி வைத்தார்களோ அங்கெல்லாம் கல்வெட்டுகள் வெட்டப்பட்டு அந்த மன்னர்களின் பெருமைகள் அதில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. கல்வெட்டுகள் பெரும்பாலும் பொதுமக்கள் பார்ப்பதற்காக வெட்டப்படுவதால் அவை பொது இடங்களிலேயே அதிகம் காணப்படுகின்றன. கோயில், குகைகள், பொதுமண்டபங்கள், வெற்றி தூண்கள், நடு கற்கள், இறந்தோர் நினைவு கற்கள் என்று கல்வெட்டுகளை நாம் பல இடங்களில் காண முடியும்.

தமிழகத்தில் பெரும்பாலான கல்வெட்டுக்கள் அடையாளம் இன்றி மறைந்து போய் உள்ளது தமிழ்நாட்டில் பெரும்பாலான கல்வெட்டுக்கள் முழுமையாக படையெடுத்து வரலாற்று ஆவணமாக தொகுக்கப்படாமலும் உள்ளன அதில் பல வரலாற்று பெருமைகளை உள்ளடக்கிய ஒரு பகுதியாக விழுப்புரம்



©2023 by KRISHMA PUBLICATION 

மாவட்டம் இருந்து வருகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய பல கல்வெட்டுக்கள் வரலாற்றில் பல புதிய பாதையை உருவாக்கக் கூடியதாகவும் தமிழர் வரலாற்றில் பல திருப்புமுனைகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்திருக்கிறது.[1]

### விழுப்புரம் மாவட்டத்தின் வரலாற்று சிறப்பு

செப்டம்பர் 30, 1993-ஆம் ஆண்டு முந்தைய தென்னாற்காடு மாவட்டத்தில் இருந்து விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் என உருவாக்கப்பட்டு, பின்னர் விழுப்புரம் மாவட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கிழக்கில் புதுச்சேரி மாநிலமும், தெற்கில் கள்ளக்குறிச்சி மாவட்டமும், தென்மேற்கு/மேற்கில் கள்ளக்குறிச்சி மாவட்டமும், வடமேற்கே திருவண்ணாமலை மாவட்டமும், தென்கிழக்கில் கடலூர் மாவட்டமும், வடக்கில் செங்கல்பட்டு மாவட்டமும் இம்மாவட்டத்தின் எல்லைகளாக அமைந்துள்ளன.[2] மணிமுத்தாறு, கோமுகி ஆறு, கெடிலம் ஆறு, சங்கராபரணி ஆறு, செஞ்சி ஆறு, தென்பெண்ணை ஆறு ஆகியன இம்மாவட்டத்தில் பாயும் குறிப்பிடத்தக்க ஆறுகளாகும். இம்மாவட்டத்தில் கப்பியாம்புலியூர் ஏரி, கெங்கவரம் ஏரி, சாலமேடு ஏரி, மல்லிகைப்பட்டு ஏரி, கோமாலூர் ஏரி ஆகியவை குறிப்பிடத்தக்க ஏரிகளாகும். தமிழக வரலாற்றை ஆராயும் போது விழுப்புரம் மாவட்டம் சோழர்களின் ஆட்சியில் பிரதான பகுதியாக முற்கால சோழர் காலத்தில் ஆட்சி செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்த பகுதியில் பல வேளிர் அரசர்கள் ஆட்சி செய்திருப்பதையும் அதியமான் நெடுமான் அஞ்சி, திருமுடிகாரி போன்றவர்களின் தலைமையின் கீழ் விழுப்புரம் அதை சுற்றி உள்ள பகுதிகளிலும் வேளீர் அரசர்களும் பின்பு சோழ மன்னர்களும் ஆட்சி செய்திருப்பதை அறிய முடிகிறது.[3]

சிம்ம விஷ்ணு பல்லவன் இந்த பகுதியை கைப்பற்றி தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்து பின்பு விஜயாலய சோழன் பகுதியில் மீட்டு சோழப்பேரரசுடன் இணைத்துக் கொண்டான். பிறகு சாளுக்கிய மன்னர்கள் தொடர்பான கல்வெட்டு ஆதாரங்களையும் விழுப்புரம் மாவட்டத்தில் நாம் காண முடிகிறது. சுந்தரபாண்டியன் 1251ல் தனது ஆட்சியின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தை கொண்டு வந்ததற்கும் கல்வெட்டு அடையாளங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் காணப்படுகிறது. சோழப்பேரரசு சுமார் 50 ஆண்டுகள் விழுப்புரம் மாவட்டத்தை பிரதான பகுதியாக வைத்திருந்ததை பல ஆதாரங்கள் மூலமாகவும் ஒரு சில கல்வெட்டு ஆதாரங்களும் உறுதிப்படுத்துகிறது. 13-ஆம் நூற்றாண்டு காலத்தில் முகலாய மன்னர்களின் கட்டுப்பாட்டில் பகுதி இருந்ததையும் பின்பு விஜயநகர பேரரசுகள் ஆட்சிக்கு வந்ததும் விஜயநகர மன்னர்களுக்கு பிறகு நாயக்க மன்னர்கள் இங்கு ஆட்சி செலுத்த ஆட்சி செலுத்திய அறிய முடிகிறது. பிறகு 1677ல் கோல்கொண்டா படையினர் சிவாஜி மன்னர் செஞ்சிக்கோட்டையை கைப்பற்றியதையும் பிறகும் அது முகலாயப் பேரரசால் மீண்டும் கை கட்டப்பட்டதையும் பிரெஞ்சுப் படைகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பல பகுதிகள் பிரிட்டிஷ் இன் கட்டுப்பாட்டில் சென்றதையும் அறிய முடிகிறது.[4] பிற்காலச் சோழராட்சியில், கி.பி. 9--ஆம் நூற்றாண்டில் அந்தணர்களும், வேளாளர்களும் மிக உயர்ந்த பதவியை வகித்தனர் எனச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. கி.பி. 6--ஆம் நூற்றாண்டில் அவர்கள் நடத்திய போராட்டத்தின் பலனை 9-ஆம் நூற்றாண்டில் மிக நன்றாகவே அனுபவித்தார்கள்.அமைச்சர்களாகவும் பிரமதேய சதுர்வேதி மங்கலங்களின் சபை நிர்வாகிகளாகவும் படைத் தளபதிகளாகவும் கோயில் அதிகாரிகளாகவும் நீதி வழங்குபவர்களாகவும் முக்கிய பதவிகளில் அமர்ந்திருந்த அவர்கள் மிகுந்த செல்வந்தர்களாக வாழ்ந்தனர்.[5]

### எண்ணாயிரம் கல்வெட்டு காட்டும் சோழர் கால கல்வி நிலை

சங்ககாலம் தொடங்கி பல்லவர்காலம் முதல் கல்வியின் நிலை கேள்விக்குறியாகவே இருந்து வந்திருக்கிறது. சோழர் காலத்திலும் பொதுமக்களின் கல்விக்கான பள்ளிகள் இருந்ததாகத் தெரியவில்லை. பொது மக்களின் கல்வித் தரம் எப்படி இருந்தது என்பதற்கு ஒரு சான்றும் இல்லை. எத்தனை விழுக்காட்டினர் எழுத படிக்கத் தெரிந்து இருந்தனர் என்ற தகவல்கள் இல்லை. தமிழ்நாட்டின் வரலாற்றை ஆராய்ந்த பல வரலாற்று ஆய்வாளர்களிடம் தமிழ்நாட்டில் கல்வி நிலை எப்படி இருந்தது என்பதற்கான பல விளக்கங்கள் தரப்பட்டிருந்தாலும் அவை எதுவுமே தெளிவாக குறிப்பிடப்படுவதாக இல்லை. அது தொடர்பான தீர்க்கமான ஆராய்ச்சி அப்போது இல்லை என்பதையும் கே.கே. பிள்ளை போன்ற ஆராய்ச்சியாளர்கள் தமிழ்நாட்டின் கல்வி நிலை சங்க காலம் துவங்கி பல்லவர் காலம் வரை எப்படி இருந்தது என்பது பற்றிய தெளிவு இல்லை என்பதையும் குறிப்பிடுகிறார். பின்பு அவருக்குப் பிறகு பல ஆராய்ச்சியாளர்களும் இதுபோன்ற கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். பிற்கால சோழர் வரலாற்றில் தமிழக வரலாற்றின் மீது புதிய வெளிச்சம் ஏற்படுகிறது அதில் சோழ மன்னர்கள் தொடர்பான கல்வெட்டு ஆதாரங்கள் பெருமளவில் கிடைக்கப்பெற்று இருக்கிறது. அதில் சோழர் காலத்தின் கல்வி நிலையை நாம் அறிந்து கொள்ள மிக தீர்க்கமான வரலாற்று அடையாளமாக இருப்பது என்னாயிரம் கல்வெட்டு சோழர் காலக் கல்வெட்டுகள் தனித்தன்மை வாய்ந்தவை. கல்வெட்டின் தொடக்கத்தை வைத்தே குறிப்பிட்ட காலத்தை அல்லது குறிப்பிட்ட அரச மரபால் வெட்டப்பட்டது எனக் கூற முடியும்.[6] சோழர் காலக் கல்வெட்டுகளில் குறிப்பிடத்தக்கவை மெய்கீர்த்தி என்னும் கல்வெட்டுப் பகுதியாகும். இவை செய்திகளைக் கூறுவதில் ஓர் இலக்கிய வடிவைப் பெற்றுத் திகழ்ந்தன. சோழர் காலக் கல்வெட்டுகளில் கொடைச் செய்தி மட்டுமின்றி கல்வி, மருத்துவம், நீதி முறை, ஊராட்சி முறை போன்ற செய்திகளும்

மிகுதியாகக் காணப்படுகின்றன. முதலாம் இராசேந்திரனுடைய 'எண்ணாயிரம்' என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டும், செங்கல்பட்டு வட்டம் திருமுக்கூடலில் காணப்படும் கல்வெட்டும் சோழர் காலக் கல்வி முறையை விளக்குவனவாக உள்ளன. முதலாம் இராசராசன் தஞ்சாவூரில் இராசராசேச்சுவரம் என்ற கற்கோவில் கட்டி அதற்கு அளித்த கொடைகள் பற்றி இக்கோவில் கல்வெட்டுகள் பறைசாற்றுகின்றன. விழுப்புரத்துக்கு அருகில் என்னாயிரம் என்ற ஊர் உள்ளது. அங்கே அழகிய நரசிங்க பெருமாள் கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன அதில் பழைய கல்வெட்டு முதலாம் இராஜேந்திரன் அந்த கல்வெட்டில் பல அரிய செய்திகளை பார்க்க முடிகிறது. முதலாம் இராஜேந்திரனுடைய மெய்க்கீர்த்தி திருமணி வளர... என்ற வரிகளோடு இந்த கல்வெட்டுகள் துவங்கப்படுகிறது. இந்த கல்வெட்டுகளில் தனி ஊராக இருந்த ஜெயகொண்ட சோழமண்டலம் என்ற ஊரில் சதிர்வேதி மங்கலம் என்ற பிரம்மதேயத்தின் மகா சபையினர் கூடி அரசனான இராஜ ராஜ சோழ உடையார் தேவருக்கு தோள்களின் வலிமை பெறுவதற்கு தானங்கள் அளிக்க தீர்மானித்தனர் அது பற்றிய விவரங்களை இந்த கல்வெட்டு அளிக்கிறது.[7]

**எண்ணாயிரம்-நான்மறை கல்வி**

விழுப்புரம் மாவட்டத்தில் எண்ணாயிரம் என்ற ஊருக்கு வட மேற்கே அமைந்துள்ள மேலகூடலூர் மலையில் இயற்கையாக அமைந்துள்ள குகை தளத்தில் சமணப் படுக்கைகள் உள்ள இடத்தில் பன்மார்க் யாண்டு என்ற வரிகளுடன் நான்காவது கல்வெட்டு குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டை ஒட்டினார் போல் பல்லவ மன்னன் நிருதுபங்கனின் இரண்டாவது ஆட்சியை ஆண்டுகள் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. (கி.பி. 870-871) அதற்கு அருகில் கோப்பெருங்கேசரி பன்மார்க் என்று குறிப்பிடுகின்ற கல்வெட்டு விஜயாலயன் உடையதாக இருக்கலாம் என்றும் அறியப்படுகிறது. கோவிலுக்கு விளக்கு எரிக்க ஆடுகள் கொடை கொடுத்ததை குறிப்பிடுகிறது.[8]

சோழர் வரலாற்றில் விழுப்புரம் மாவட்டம் விஜயாலய சோழன் ஆட்சிக்காலத்தில் இருந்து சோழர்களுக்கு கட்டுப்பட்டு இருந்திருந்தாலும் இராஜேந்திர சோழனுடைய ஆட்சி காலத்தில் தான் மிக முக்கியமான பிரதான பகுதியாக விழுப்புரம் மாவட்டம் விளங்கி இருக்கிறது. அதில் குறிப்பிடத்தக்க அதற்கு வரலாற்று அடையாளமாக கூறப்படுவது எண்ணாயிரம் பகுதியில் கிடைக்கக்கூடிய கல்வெட்டு ஆதாரங்களை ஆகும். அதில் வேத பள்ளியில் சாலைகள் சோழர்காலத்தில் சிறப்புற்று இயங்கி இருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. ஆராசா விண்ணகர் ஆழ்வார் கோயில் என்ற பெயரில் இது அழைக்கப்படும் இருந்திருக்கிறது. முதலாம் இராஜேந்திரன் காலத்தில் எண்ணாயிரத்தில் ஒரு வேதக் கல்லூரி இருந்ததையும் அவனுடைய கல்வெட்டுக்கள் அழகிய நரசிங்க பெருமாள் கோயில் என்ற இந்த கோயிலில் குறிப்பிடப்பட்டு இருப்பதும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த கல்லூரியில் வேதம், மிமாம்சம், வேதாந்தம் ஆகியவை கற்பிக்கப்பட்டு இருக்கிறது. கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு என தனியாக விடுதியும் அமைத்து தரப்பட்டிருக்கிறது. இக்கல்லூரியில் மற்ற கோவில்களில் இருந்து தனித்த இடமாக இது அமைவதற்கு நான்கடி உயரமுள்ள பீடத்தின் மீது இக்கோயில் உயர்ந்து நிற்கிறது. இந்த பெருமாள் மூலவராக இங்கு காட்சியளிக்கிறார். திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவியில் இதே போன்ற ஒரு கோயில் கட்டிட அமைப்பு பார்க்க முடிகிறது.

**எண்ணாயிரம் கல்வெட்டின் மூலம் அறியலாகும் செய்திகள்**

இன்றளவில் எண்ணாயிரம் பகுதி மிக பின்தங்கிய கிராமப்புற பகுதியாக காட்சியளிக்கிறது இருந்தாலும் சோழர் காலத்தில் மிகப் பிரதான பகுதியாக இந்த எண்ணாயிரம் பகுதியும் அதை சுற்றி உள்ள பகுதிகளும் இருந்திருக்கிறது. எண்ணாயிரம் என்ற ஊரின் இப்போதைய பெயர் இராஜேந்திர சோழன் சதுர்வேதி மங்கலம் முதல் இராஜேந்திரர் காலத்தில் இவ்வூரில் பல திருக்கோயில்கள் இருந்தன. அவற்றுள் ஒன்றுதான் இராஜராஜ விண்ணகரம். அழகிய நரசிங்கப் பெருமாள் கோயில் ராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்ற எண்ணாயிரம் தலத்தில் வேதங்கள் கற்பிப்பதற்காக இராஜேந்திர சோழன் காலத்தில் வேதக்கல்லூரி நடத்தப்பட்டுள்ளது. இந்த கல்லூரிக்கு இம்மன்னன் 300 ஏக்கர் நிலத்தைக் கொடையாக வழங்கியுள்ளான். வேதபாடசாலையில் பயிலும் மாணவர்களுக்குத் தங்கும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. வேத பண்டிதர்களுக்கான இக்கல்விச் சாலையில் 270 இளநிலை மாணவர்க ளும் 70 முதுநிலை மாணவர்களும் 10 ஆசிரியர்களும் இருந்துள்ளனர். இங்குள்ள வேதக்கல்லூரியில் மாணவர்களுக்கு ரூபாவதார இலக் கணமும், ரிக், யஜுர், வாஜசனேய சாமவேதமும், சண்டோக சாமவேதமும், தலவாகர சாமவேதமும், அதர்வண வேதமும், பௌதாயன கல்ப சூத்திரம், பௌதாயன ஞான சூத்திரம் ஆகியவை கற்பிக்கப்பட்டுள்ளன. இந்த வேத பாடசாலையில் கல்வி உதவித் தொகையாக இளநிலை மாணவர்களுக்கு நாள்தோறும் ஆறு நாழி நெல்லும் முதுநிலை மாணவருக்கு பத்து நாழி நெல்லும் கொடுக்கப்பட்டுள் ளது. இக்கல்விச் சாலையில் பணிபுரிந்த வேதாந்தப் பேராசிரியருக்கு நாளொன்றுக்கு ஒன்றரைக் கலம் நெல் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.[9]

**சோழர்காலத்தில் இளங்கலை, முதுகலை பாடப்பிரிவுகள்**

மீமாம்சமும், வியாகரணமும் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்களான நம்பிகளுக்கு ஒரு கலம் நெல்லும் மற்ற ஆசிரியர்களுக்கு முக்கால் கலம் அல்லது முக்குறுணி நெல் ஊதியமாகத் தரப்பட்டுள்ளது.

தானியமாக வழங்கப்பட்ட இந்த ஊதியம் தவிர வேதாந்தப் பேராசிரியர் நீங்கலாக எல்லா ஆசிரியர் மற்றும் முதுநிலை மாணவர்களுக்குத் தங்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. வேதாந்தம் கற்றுக் கொடுத்துப் பணம் சம்பாதிப்பது தடை செய்யப்பட்டிருந்ததால் வேதாந்தப் பேராசிரியர்களுக்கு மட்டும் தங்கம் வழங்கப்படவில்லை. இராஜராஜ சதுர்வேதி மங்கலத்து (எண்ணாயிரம்) இக் கல்லூரியில் பயின்ற மாணவர்களுக்கு உணவு வழங்குவது என்றும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க ஏற்பாடு செய்வதென்றும் அரசாங்க அதிகாரி ஒருவன் முன்னிலையில் முடிவு செய்துள்ளனர். இருநூற்று எழுபது பட்டப் படிப்பு மாணவர்களும் எழுபது பட்டமேற்படிப்பு மாணவர்களும் பயின்ற இக்கல்லூரியில் பல்வகைப் பாடங்களையும் பயிற்றுவிக்கத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் பன்னிருவர் இருந்தனர். இவர்கள் அனைவர்க்குமாய்ச் சேர்த்து ஆண்டுதோறும் பத்தாயிரத்து ஐந்நூற்று ஆறு கலம் நெல்லும் அறுபத்தொன்றரைக் கழஞ்சுப் பொன்னும் செலவிடப்பட்டது.[10]

### சோழர் காலத்தில் கல்லூரி நிர்வாகம்

இந்தக் கல்லூரியின் நிர்வாகத்தை அரசோ, பல்கலைக்கழகமோ, நகராட்சியோ மேற்கொண்டிருக்கவில்லை. ஒரு கிராம சபையே மிக ஒழுங்குடன் இதைச் செய்துவந்திருக்கிறது. அந்நாளைய ஊரவைகளின் செயல்திறமைக்கு இது ஒன்றே போதுமான சான்றாகும். ஆண்டுதோறும் நேரக்கூடிய இந்தச் செலவுகளைத் தொடர்ந்து சரிக்கட்ட வாய்ப்பாக, வருடம் தோறும் இத்தொகையை வருவாயாகத் தரவல்ல 45 வேலி நிலத்தை இராஜராஜ சதுர்வேதிமங்கலத்துச் சபையார் இக்கல்லூரியை நடத்திவந்த கோயிலுக்குக் கொடையளித்தனர். இன்றைக்கு வங்கிகளில் வைப்பு நிதி போட்டு வட்டி பெறுவது போல், இந்த நிலம் வைப்பு நிதியாகக் கொள்ளப்பட்டு இதன் விளைச்சல் கல்லூரிச் செலவுகளை ஈடுகட்டும் வட்டியாகப் பெறப்பட்டது.[11]

### நவீன கல்வி முறையும் சோழர்கால கல்விமுறையும்

சோழர் காலத்தில் கிராமங்களில் கல்வியை வளர்க்கும் பொருட்டு, கிராம கல்விக் குழுக்கள் அமைக் கப்பெற்று, அதன் உறுப்பினர்கள் உதவியுடன் கிராமத்தில் நிதி திரட்டி அதன் மூலம் பள்ளிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டன. பாடத்தோடு கலை மற்றும் பண்பாடு குறித்த கல்வியும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. தமிழகத்தில் சோழர்கள் காலத்தில் கல்வி முறை சிறப்பாக இருந்துள்ளது. பழமையான மற்றும் பாரம்பரியம் வாய்ந்த கல்வி முறை தற்போது இந்தியாவில் பின்பற்றப்படும் கல்வி முறையோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு உறுதுணையாக இருக்கிறது. சோழர் காலத்தை சேர்ந்தது. இன்றளவில் ஆசிரியர்களுக்கு எவ்வாறு ஊதியம் வழங்கப்படுகிறது அதற்கு நிகராக நன்று சோழர் காலத்தில் ஆசிரியர்கள் பேராசிரியர்கள் மிக உயர்வான சமூக அங்கீகாரமும் நல்ல ஊதியமும் வழங்கப்பட்டிருக்கிறது சோழர் காலத்தில் வழங்கப்பட்ட ஊதியங்களின் அடிப்படையில் பார்த்தால் இன்றைய அளவில் ரூபாய் இரண்டு லட்சம் அளவில் ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது. மாணவர்களுக்கு வரலாறு இலக்கியம் கலை போன்றவை பிரதானமாக கற்பிக்கப்பட்டு இருக்கிறது மாணவர்களுக்கு தங்கும் விடுதி வசதியும் உதவித் தொகையும் வழங்கப்பட்டிருக்கிறது.[12] மாணவர்களின் விகிதாச்சாரம் எவ்வளவு இருக்க வேண்டும் எத்தனை மாணவர்களுக்கு எத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் தற்போது இருக்கக்கூடிய உயர் கல்வி வழிகாட்டுதலின் அடிப்படையில் அமைந்திருப்பது போல அன்று சோழர் காலத்தில் மிக தெளிவாக திட்டமிடப்பட்டு எவ்வளவு மாணவர்களுக்கு எவ்வளவு ஆசிரியர்கள் தேவை என்பதை சரியாக ஆராய்ந்து பல ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் உயர்கல்வியில் ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் 1:20 ஆக இருக்க வேண்டும் என பல்கலைக் கழக மானியக் குழு (யுஜிசி) தற்போது வலியுறுத்துகிறது. சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முன்பே சோழர்கள் இதைச் செயல்படுத்தி யிருப்பது வியப்பு அளிக்கிறது.[13]

### முடிவுரை

இக் கல்வெட்டுச் செய்திகளின்படி தமிழகத்தில் கி.பி. 846 முதல் கி.பி. 1279 வரை ஆண்ட சோழர்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து தமிழையும், வேத சாத்திரங்களையும் வளர்ப்பதில் அக்கறை காட்டினர். உண்டு, உறைவிடக் கல்விக்கூடங்களையும் ஊக்கப்படுத்தி பயிற்றுவிக்கும் குருமார்களுக்குத் தாராளமாக ஊதியம் அளித்ததுடன் மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கினர். 1000 தொடங்கி 1900 வரை மன்னர்களாலும் வணிகப்பெருமக்களாலும் வேதக்கல்லூரிகளும் வேதப்பாடசாலைகளும் அமைக்கப்பட்டு வடமொழி காக்கப்பட்டுள்ளது. அதனை சிறு குழு பெருந்தொகையிலான மக்களிடம் கற்பிக்காமல் தமக்குள்ளே பூட்டிவைத்ததனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான பராமரிப்பிருந்தும் அருகிவிட்டது. வரலாற்று காலவரிசை இரண்டாம் நந்திவர்மன் என்ற பல்லவ மன்னன் சோளிங்கர் என்ற ஊரில் வேதங்கள் கற்பித்த சோமாஜி என்ற அந்தணருக்கு வேதவீரமங்கலம் என்ற சிற்றூரைத் தானம் கொடுத்தான். விக்கிரம சோழன் கல்வெட்டு திருவாடுதுறையில் மருத்துவசாலையும், மருத்துவக் கல்லூரியும் இருந்ததாகக் கூறுகிறது. ஆசிரியர்கள் மரியாதையுடன் நடத்தப்பட்டனர். வாத்தி என்று ஆசிரியர்கள் அழைக்கப்பட்டனர். நித்த வினோதப் பேரரையார் என்பன போன்ற பட்டங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கபட்டது. மூன்றாம் ராஜராஜசோழன் காலத்தில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்து நாடு, நகரங்களை அழித்தான். ஆயினும், பட்டினப்பாலை வேதக்கல்வியும்,

வேள்வியும் பாண்டியர் காலத்தில் போற்றப்பட்டது. என்பது போல காட்டுகிறது. வேதக்கல்வியும், வேள்வியும் பாண்டியர் காலத்தில் போற்றப்பட்டது. சோழர் கால கல்வெட்டுகளின் அடிப்படையில் கல்வி வளர்ச்சிக்கு சோழ மன்னர்கள் அளித்த முக்கி யத்துவத்தை அறிய முடிகிறது. நவீன கல்வி முறையை திட்டமிடுபவர்களுக்கு உதவுகிற வகையில், உலகம் முழுவதற்கும் பயன்படக்கூடிய வகையில், சோழ மன்னர்கள் தங்களது ஆட்சிக் காலத்திலேயே சிறந்த கல்வி முறையை பின்பற்றியுள்ளனர். மாணவர்கள் வரலாற்றை படிக்கும் போது, அனுமானங்களின் அடிப்படையில் மட்டுமல்லாமல், வரலாற்று உணர்வுகளுக்கும் முக்கி யத்துவம் கொடுத்து அவற்றை படிக்க வேண்டும். உலகில் உள்ள பழமையான நாகரீகங்களில் இந்திய மற்றும் சீன நாகரிகங்கள் மட்டுமே வரலாற்றை முதலில் எழுதத் தொடங்கின. இந்தியாவில் கிடைக்கப்பெற்ற வரலாற்று கல்வெட்டு ஆதாரங்களில், மூன்றில் ஒரு பகுதி தமிழ கத்தில் உள்ளது. அதில் பெரும் பாலானவை எனவே தமிழ்நாட்டு வரலாற்றில் பல மகத்துவமான செய்திகள் கல்வெட்டுகளில் புதைந்து உள்ளது . அதை வெளிக்கொணரும் முயற்சி பல வரலாற்று திருப்புமுனைகளை ஏற்படுத்தும்.

**ஆதாரங்கள்**


1. "தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டம்"
2. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்ட வரலாறு கு. தாமோதரன், தமிழ்நாடு தொல்பொருள் ஆராய்ச்சி துறை, சென்னை 1994, ப.எண்., 8
3. அதுவே., , ப.எண்., 9
4. மா.ராசமாணிக்கனார். சோழர் காலக் கல்வெட்டு. பக். 73,74.
5. பேரா.ஜே.தர்மராஜ். சோழர் காலக் கல்வெட்டு. பக். 16,20,21.
6. சோழர்கள் - K.A.நீலகண்ட சாஸ்திரி - பாகம் இரண்டு - பக்கம் 727.
7. பிற்காலச் சோழர் வரலாறு தி.வை.சதாசிவ பண்டாரத்தார் -அண்ணாமலைப் பல்கலைகழகம் பக்கம் எண்:471.
8. அதுவே., ப. எண். 474.
9. வேங்கடம் முதல் குமரி வரை 5 ஆசிரியர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்., எண்ணாயிரம்.
10. தி இந்து நாளிதழ் . நவீன கல்வி முறைக்கு உதவும் சோழர் கால கல்வி: பாரதிதாசன் பல்கலை. பேராசிரியர் புகழாரம்.
11. தினமணி, சோழர் கால பள்ளிக்கூடங்கள், முதுமுனைவர் பாலசுப்ரமணியம்,
12. எஸ்.கிருஷ்ணன்., சேர சோழ பாண்டிய பல்லவ கால கல்வெட்டுகளும் செப்பேடுகளும், சுவாசம் பதிப்பகம் பக்க எண் 23.
13. குள சண்முகசுந்தரம் (சனவரி 30 ,2017). "எண்ணாயிரம் கல்வெட்டுச் செய்தி" மதுரை.ப.எண். 2.


*****